# பன்னிரு திருமுறைத் தோத்திரத் திரட்டு

## திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

# முதலாந் திருமுறை

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தலம்–திருப்பிரமபுரம் இராகம்– கம்பீரநாட்டை கட்டளை–1

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

தலம்– சிதம்பரம் இராகம்– அரிகாம்போதி கட்டளை–3

கற்றாங் கரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

தலம்– திருச்சிராப்பள்ளி இராகம்– அரிகாம்போதி கட்டளை–5

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிருமே

# இரண்டாந் திருமுறை

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

**கட்டளை-2 இராகம்- நவரோஜ் தாளம்- ரூபகம்**

மந்திர மாவதுநீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே

**கட்டளை -1 இராகம்- நவரோஜ் தாளம்- திஸ்ரதிருபுடை**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

**கட்டளை- 2 இராகம்- மாயாமாளவகௌளை தாளம்- ஆதி**

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

# மூன்றாந் திருமுறை

## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

கட்டளை–1 இராகம்– நவரோஜ் தாளம்– மிஸ்ரசாபு

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

கட்டளை – 3 இராகம்– நவரோஜ் தாளம்– மிஸ்ரசாபு

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பலஅல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே

கட்டளை– 1 இராகம்– பூபாளம் தாளம்– ஆதி

தாயினும் நல்ல தலைவர்என்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைஅமர்ந் தாரே

# நாலாந் திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

கட்டளை-1 இராகம்- கேதாரகௌளை தாளம்- ஆதி

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

கட்டளை - 1 இராகம்- பந்துவராளி தாளம்- ரூபகம்

தலையே நீவணங்காய்- தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கட்டளை- 1 இராகம்- நவரோஜ் தாளம்- ஆதி

கூற்றா யினவாறு விலக் ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறை யம்மானே

# ஐந்தாந் திருமுறை
## திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

பண் - திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே

# ஆறாந்திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார்

### திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தலம்- திருக்காளத்தி கட்டளை-1 இராகம்- அரிகாம்போதி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின்மேலான்
ஏழண்டந் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கைலாயத் துச்சிஉள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணுளானே

தலம்- திருநல்லூர் கட்டளை-1 இராகம் - அரிகாம்போதி

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுஉரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்லவாறே.

# ஏழாந்திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

தலம்-திருவெண்ணெய்நல்லூர் இராகம்-மாயாமாயவகொளை
கட்டளை-1

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

தலம்-திருக்கேதீச்சரம் இராகம்-கம்பீரநாட்டை கட்டளை-1

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

தலம்-திருப்பாண்டுக்கொடுமுடி இராகம்-சங்கராபரணம் கட்டளை-2

மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ்சீர்க்கரை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.